# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 13/2025 நாள்.01.04.2026

DW1- திரு.வெங்கடேசன், த/பெ. திரு.சுப்பையா

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் வழக்கறிஞர் தொழில் செய்கிறேன் என்றால் ஆமாம். வழக்கு விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். முதல் விசாரணை வாக்குமூலம் தயார் செய்ய நான்தான் விபரம் சொன்னேன் என்றால் ஆமாம். என்னுடைய முதல் விசாரணையில் முதல் பக்கத்தில் உள்ள வாசகமான எனது மனைக்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தமில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அ.வ எண் 131/2015 வழக்கில் நான் மனை எண் 22 புல எண் 60/17க்கு கோரிக்கை வைத்திருந்தேன் என்றால் ஆமாம். 60/5 பகுதி என்று இருந்தது உட்பிரிவின்போது 60/17 ஆக மாறியது. 60/5எ, 60/5 பி பகுதியில் அடங்கிய மனை எண் 3தொடர்பாக எனக்கு கோரிக்கையோ ஆட்சேபணையோ உள்ளதா என்றால் 60/5 என்பது 2 ஏக்கர் 20 சென்ட் உள்ளது மேற்படி உட்பிரிவுகள் 60/5எ, 60/5பி என்பது எந்த பகுதி என்று வாதி தரப்பில் சொல்லப்படவில்லை. மேற்சொன்ன விபரம் என்னுடைய எதிர்வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் ஆமாம். 60/5 மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 20 சென்ட் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். வாதி தரப்பு ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் புல எண் 60/5 இல் 65 சென்ட் என்று குறிப்பிட்டு அதற்கு நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம் அது 60/5 புல எண்ணின் கீழ்பகுதியாகும். வா.சா.ஆ1 ஆவணத்தில் அது கீழ் பகுதி என்று குறிப்பு இல்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணம் 27.11.1945இல் பதிவான ஒன்று என்றால் ஆமாம். ஆரோக்கியமேரி என்பவர் ரஞ்சிதமரி என்பவருக்கு எழுதிகொடுத்த ஆவணம் என்றால் ஆமாம். வா.சா.ஆ1ன் படி ரஞ்சிதமரிக்கு கொடுத்த சொத்து குறித்து எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. 6.10.1947 தேதியில் ரஞ்சிதமரி மகமுஅம்மாள் என்பவருக்கு வா.சா.ஆ.2 மூலம் முழுசொத்தையும் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு ஆமாம் என்று சொல்கிறார். 21.8.1995இல் மகமுஅம்மாளின் வாரிசுகள் திருவையாறை சேர்ந்த பழனிசாமி மகன் கோவிந்தராஜன் என்பவர் விலைக்கு வாங்கியுள்ளார் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு அதில் கண்ட சொத்து மாறுபட்டது என்று சொல்கிறார். அவ்வாறு சொன்னால் தவறு என்றும் முந்தைய ஆவணத்தில் சென்ட் கணக்கில் அளவுகள் உள்ளது என்றும் கோவிந்தராஜன் ஆவணத்தில் சதுரடி கணக்கில்

உள்ளது என்று சொன்னால் சரியல்ல. கோவிந்தராஜன் 28.4.2003 இல் கிருஷ்ணராமானுஜம் என்பவரை பொது அதிகார முகவராக பதிவு செய்த ஆவணத்தின் மூலம் நியமித்துள்ளார் என்றால் ஆமாம் சொத்துவிபரம் மாறியுள்ளது. அவ்வாறு பொது அதிகாரம் பெற்ற கிருஷ்ணராமானுஜத்திடமிருந்து வாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சாட்சி ஆவணத்தை வாங்கி பார்த்துவிட்டு ஆமாம் என்று சொல்கிறார் ஆனால் அந்த சொத்து தாவா சொத்து அல்ல என்றும் சொல்கிறார். வா.சா.ஆ. 6, 7 ஆவணத்தின் அடிப்படையில் வாதிபெயருக்கு கூட்டுபட்டாவும் பின்பு தனிபட்டாவும் ஏற்பட்டுள்ளது என்றால் ஆமாம். வாதி பெயருக்கு ஏற்பட்ட கிரைய ஆவணமும் பதிவான ஆவணங்களும் தவறானது என்று சொல்லி எந்த நீதிமன்றத்தில் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் ஏற்கனவே அ.வ எண் 131/15 தாக்கல் செய்து தீர்ப்பாகியுள்ளது. வா.சா.ஆ.12 மேற்படி அ.வ எண் 131/15 இன் தீர்ப்பு நகல் என்றால் ஆமாம். அந்த வழக்கில் நான் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் கொடுக்கபட்டுள்ளதா என்றால் ஆமாம். அவ்வழக்கில் ஏற்படுத்தபட்ட எழுவினாக்களில் இவ்வழக்கின் வாதி தாவா சொத்து அவருக்கு சொந்தமானது என்று கோரிக்கை விடுத்ததாகவும் அது குறித்து எழுவினா எழுப்பி முழுவிசாரணைக்கு பிறகு அவ்வாறு முடிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல முடிவு செய்யபட்டுள்ளது. அவ்வாறு நான் சொல்வது தவறு என்றும் வாதிக்கு எதிராக எந்தவித எழுவினாவும் எழுப்படவில்லை என்றும் முடிவும் காணப்படவில்லை என்றும் சொன்னால் குறிப்பாக அந்த வழக்கின் 12ஆம் பிரதிவாதியும் இவ்வழக்கின் வாதிக்கு எதிராக சொல்லபட்டுள்ளது. அந்த வழக்கின்படி புல எண் 60/5 யாருக்கு சொந்தமானது என்பது என்னுடைய கட்சி என்றால் அந்தோணிசாமிக்கு பாத்தியபட்டு அவரிடமிருந்து 4, 5 கிரையமாகி பின்பு நான் வாங்கியுள்ளேன். அந்த வழக்கில் வா.சா.ஆ.1ஆக 14.6.1980 அந்தோணிசாமி கோவிந்தராஜனுக்கு எழுதிகொடுத்த பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அந்தோணி சாமிக்கு சொத்து எவ்வாறு பாத்தியபட்டது என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் அது அவருக்கு பூர்விக சொத்து என்பதால் தாக்கல் செய்யவில்லை. என் பிராதில் புல எண் 60/3 அந்தோணிசாமிக்கு பூர்விக சொந்தமா கிரையம் வாங்கியதா என்றால் பூர்விகமானது. நான் அவ்வாறு சொல்வது தவறு என்றும் 60/3 சொத்து ஒரு வியாகுலம் என்பவருக்கு சொந்தமான சொத்து என்றால் நான் வாங்கியது புல எண் 60/5பகுதிதான் அதனால் 60/3 ஐ பற்றிதெரியாது. 18.6.1975இல் அந்தோணிசாமி புல எண் 60/3இல் 91 சென்ட் நிலம் மட்டும் கிரையம் வாங்கியிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்தோணிசாமிக்கு புல எண் 60/3 இல் 91 சென்ட் நிலத்தை தவிர புல எண் 60/5இல் அந்தோணிசாமிக்கு எந்தவிதமான சொத்தும் பாத்திமில்லை என்று சொன்னால் சரியல்ல.

எதிர்வழக்குரை தாக்கல் செய்யமுன்பு வாதியின் பிராதை படித்து பார்த்தேன் என்றால் ஆமாம். வழக்குரையில் பக்கம் 6இல் பத்தி 9இல் புல எண் 60/3இல்தான் 91 சென்ட் அவருக்கு சொந்தம் என்றும் 60/5இல் அவருக்கு எந்த சொத்தும் இல்லை என்றும் சொல்லபட்டுள்ளது என்றால் அவ எண் 131/15 வழக்கில் அந்தோணிசாமிக்கு சொந்தமானது என்று தீர்ப்பாகிவிட்டதை சொல்லியுள்ளேன்.இந்த வழக்கில் அந்த மறுப்பை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 60/5 ஏற்கனவே தஞ்சாவூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அவஎண் 422/2007 என்ற வழக்கு நடந்தது என்றால் எனக்கு தெரியாது. 422/2007 வழக்கின் வழக்குரை தீர்ப்பு ஆகியவை 131/15 இல் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ஆமாம். 131/15 வழக்கில் அந்தோணிசாமிக்கு புல எண் 60/5 சொந்தமில்லை என்பது குறித்து அவ எண் 422/2007 4/2008 வழக்குகள் 3ஆம் நபர்களால் தாக்கல் செய்யபட்டவை என்றும் அவற்றில் 131/15 தரப்பினர்களோ அவர்களின் விற்பனையாளர்களோ தரப்பினர் இல்லை என்றும் அதனால் அது அவர்களுக்கு பொருந்தாது என்றும் உத்தரவாகியுள்ளது என்றால் ஆமாம். 60/5 அந்தோணிசாமிக்கு சொந்தம் என்றும் அவரிடமிருந்து கிரையம் பெற்ற ஆவணங்கள் சரியானவை என்றும் ஏதும் தீர்ப்பாகவில்லை என்றால் சரியல்ல. அவ எண் 131/15 தீர்ப்பில் ஆணையர் அறிக்கை சி3ன் அடிப்படையில் அவ்வழக்கின் வாதி வாங்கிய சொத்து 1ஆம் பிரதிவாதி ஏற்படுத்திய லேவுட்டின் மேல் பக்கத்திலுள்ளது என்றும், அது மேலும் வாதி வாங்கிய தாவா சொத்தனாது 1ஆம் பிரதிவாதி ஏற்படுத்திய லேவுட்டின் பகுதியல்ல என்றும் முடிவு கண்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி கேள்விக்கு பிரதிவாதி தரப்பில் ஆட்சேபிக்கபட்டது. இந்த வழக்கில் வாதி வாங்கிய சொத்தானது அந்த வழக்கின் 1ஆம் பிரதிவாதி ஏற்படுத்திய லேவுட்டின் கண்ட சொத்து என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கின் வாதி வாங்கிய சொத்தும் அவ எண் 131/15இல் நீதிமன்ற ஆணையரால் எனக்கு அடையாளம் காணபட்ட சொத்தும் ஒன்றல்ல வேறுவேறு சொத்து. வாதி தாவாவில் விலைக்கு வாங்கி அனுபவம் செய்து வருவதாக சொல்லும் சங்கதிகள் குறித்து எனக்கு ஆட்சேபணை இல்லையா என்றால் வாதி அவருடைய தாவா ஆ பட்டியல் சொத்து அவருடைய அனுபவத்தில் இருப்பதாக சொல்வதை நான் ஆட்சேபிக்கிறேன். நான் அனுபவத்தை மட்டும் ஆட்சேபிக்கிறேனா என்றால் அனுபவம் உரிமைமூலம் ஆகியவற்றை ஆட்சேபிக்கிறேன் அது குறித்து எதிருரையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். ஆ பட்டியலில் சொல்லபட்டுள்ள சொத்து அ பட்டியல் சொத்தின் மொத்த விஸ்தீரணத்தின் ஒரு பகுதி என்றால் தெரியாது. ஆ பட்டியல் சொத்தில் நான் அனுபவத்தில் இருப்பதாக என்னுடைய கட்சி இல்லை என்றால் சரியல்ல என் அனுபவத்தில் உள்ளது, சாட்சி மீண்டும் கிரையம் பெற்றதிலிருந்து என் அனுபவத்தில் இருப்பதாக

சொல்கிறார். அவ எண் 131/15 வழக்கிற்கு பின்னிட்டு நான் தாவா ஆ அட்டவணை சொத்தை ஆக்கிரமனம் செய்துவிட்டேன் என்றும் உரிமை மூலம் விளம்புகையும், ஆ பட்டியல் சொத்து சுவாதீன மீட்சியும் கோரிதான் வாதி வழக்கு போட்டள்ளார் என்றால் ஆமாம். அந்த பரிகாரத்திற்கு நீதிமன்றத்தால் ஏற்ககூடிய மறுப்பு எதையும் நான் சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் கிரையம் வாங்கிய இடம் சிலோன்காலனி என்றால் ஆமாம். வாதி தாக்கல் செய்துள்ள தாவா சொத்து வங்கி ஊழியர் காலனி விரிவாக்கம் என்றால் சரியல்ல. வங்கி ஊழியர் காலனி விரிவாக்கம் என்பது நாஞ்சிகோட்டை ஊராட்சியிலிருந்து உரிய அனுமதி அங்கீகாரம் பெற்று பல நபர்களுக்கு விற்கபட்டுள்ளது என்றால் தவறு. அந்தோணிசாமிக்கு 60/5இல் எந்த சொத்தும் இல்லை என்றும் நான் தவறாக வாதிக்கு எதிராக உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல. தாவாவில் சொல்லியுள்ளபடி அ பட்டியலை உள்ளடக்கிய ஆ பட்டியல் சொத்து வாதிக்கு முழு உரிமையுடையது என்றால் தவறு. வழக்குரையில் கோரியபடி வாதிக்கு பரிகாரம் கிடைக்ககூடியது என்றால்சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**

**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**

**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**

**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**

**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.04.01 16:26:15 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**

**தஞ்சாவூர்.**